| O.S.No.246/2021 | DW1: திருமதி.முனியம்மாள்,<br>க/பெ. திரு.ராஜேந்திரன், | 29-10-2025 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை :**

1) நான் படிக்கவில்லை. கையெழுத்து மட்டும் போடுவேன். எனக்கு வங்கியில் பணப்பரிமாற்றம் செய்வது சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. ராமகிருஷ்ணன் எனது மகன். சுகன்யா எனது மருமகள். என் மகன் B.E படித்துள்ளார். என் மருமகள் MCA படித்துள்ளார். என் மகனுக்கும், மருமகளுக்கும் தமிழ், ஆங்கிலம் நன்கு தெரியும் என்றாலும், வங்கி ஆன்லைன் பணபரிவர்த்தனை பற்றிய விஷயங்கள் நன்கு தெரியும் என்றாலும் சரிதான். வழக்கு சொத்து எங்களுக்கு உரிமையான சொத்து தான். வா.சா.ஆ.1 ஆவணத்திலுள்ள கையெழுத்து மற்றும் கைரேனை என்னுடையது தான் எனக்கு படிக்கதெரியாது என்ன செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணத்தை என்னிடம் படித்து காண்பித்து தான் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான்.

2) வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி சொத்தினை கிரையம் செய்து கொடுக்க யுவராஜ் வந்து என்னிடம் கேட்டார் என்றாலும், கொராணா காலம் என்பதால் பிறகு பதிவு செய்து தருகிறேன் என்று சொல்லிவிட்டேன் என்றாலும் சரியல்ல. கிரைய உடன்படிக்கை படி நடந்துகொள்ளாததால் வாதி எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினாரா என்றால் அவ்வாறு அனுப்பவில்லை. நான் அந்த வழக்கறிஞர் அறிவிப்பை வாங்கிக்கொண்டு தற்போது வாங்கவில்லை என்று தற்போது பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது இல்லை.

3) வாதி கொடுத்த அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு கொடுத்தீர்காள என்றால் அறிவிப்பு எனக்கு வராததால் நான் பதிலறிவிப்பு கொடுக்கவில்லை. பதிலறிவிப்பு அனுப்பியதாக சொல்லியிருந்தால் அது பற்றிய விவரம் எனக்கு தெரியாது. அதற்கும், எனக்கும் சம்மந்தம் இல்லை. இந்த வழக்கில் என்ன பதில் போட்டுள்ளேன் என்றால் தெரியாது. இந்த வழக்கு விவரம் எனக்கு தெரியாது. இந்த வழக்கில் என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். அதில் என்ன விவரங்கள் உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வாதி நிறுவனத்தின் யுவராஜ் மீது காவல்நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்துள்ளீர்களா என்றால் இல்லை. நான் வாதி பெயரில் சட்ட நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

4) எனது பிரமான வாக்குமூலத்தில் என்ன விவரங்கள் சொல்லியுள்ளேன் என்ற விவரம் எனக்கு தெரியாது. வாதி தாக்கல் செய்த வழக்கு குறித்து நான் எதுவும் தெரியாது என சாட்சியம் அளித்துள்ளதால் வாதியின் வழக்கு தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. வழக்கு பற்றிய விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றாலும், வழக்கிற்காக தெரியாது என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u> :** இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.10.29 19:14:35 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**